**செ. கு. எண்**: 35 **நாள்**:02.02.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.2.2013

சேலம் மாவட்டம், குரும்பப்பட்டி வன உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் ஆண்டாள் என்னும் யானை, 31.1.2013 அன்று அந்தப் பூங்காவில் வனக் காவலராகப் பணியாற்றி வந்த திருமதி பத்மினி என்பவரை தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

வன உயிரியல் பூங்கா யானை தாக்கியதில் அகால மரணமடைந்த பத்மினியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பத்மினியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**